# இலக்கண வினா - விடை

## 1. எழுத்து

**1. தமிழ் நெடுங்கணக்கு எழுத்துக்கள் எத்தனை?**

247

**2. நெடுங்கணக்கு எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? அவை எவை?**

உயிர், மெய், உயிர்மெய், ஆய்தம் என நான்கு வகைப்படும்.

**தமிழ் நெடுங்கணக்கு எழுத்துக்கள் (247)**

- உயிர் எழுத்து (12) — அ, ஆ ... ஔ
- மெய் எழுத்து (18) — க், ங், ச் ... ன்
- உயிர்மெய் (216) — க + அ = க, கா, க; த் + அ = த, தா, தி
- ஆய்தம் (1) — ஃ

**3. தமிழுக்கு உயிர் போல அமைந்திருக்கும் எழுத்து வகை எது?**

உயிர் எழுத்து

**4. உயிர் எழுத்துக்கள் எத்தனை? அவை எவை?**

அ, ஆ, இ, ஈ............ முதலான பன்னிரண்டும்.

**5. உயிர் எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? அவை எவை?**

குற்றெழுத்து, நெட்டெழுத்து என இருவகைப்படும்.

**6. உயிர் குற்றெழுத்துக்கள் (குறில்) எவை?**

அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தும்.

**7. உயிர் நெட்டெழுத்துக்கள் (நெடில்) எவை?**

ஆ, ஈ, ஊ, ஏ, ஓ, ஐ, ஔ என்னும் ஏழும்.

**8. எவ்வடிப்படையில் உயிர் எழுத்துக்களை குறில், நெடில் எனப் பிரிக்கிறோம்?**

மாத்திரை அடிப்படையில்

**9. உயிர் குறிலின் மாத்திரை எவ்வளவு?**

ஒன்று

**10. உயிர் நெடிலின் மாத்திரை எவ்வளவு?**

இரண்டு

Scanned by CamScanner

**11. உயிர் எழுத்துக்களில் 'எ' என்ற வரிவடித்தை உள்ளடக்கிய உயிர் எழுத்துக்கள் எவை?**

ஊ, ஔ

**12. உடல், ஒற்று, புள்ளி என்று பெயர் பெறும் எழுத்து வகை எது?**

மெய்யெழுத்து

**13. மெய் எழுத்துக்கள் எவை? எத்தனை?**

க், ங், ச், ஞ், ட், ண் முதலான பதினெட்டும்.

**14. மெய் எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? அவை எவை?**

மூன்று வகைப்படும்.

வல்லெழுத்துக்கள் (வல்லினம்)
மெல்லெழுத்துக்கள் (மெல்லினம்)
இடையெழுத்துக்கள் (இடையினம்)

**15. மெய்யெழுத்துக்களின் மாத்திரை அளவு என்ன?**

அரை மாத்திரை

**16. வல்லெழுத்துக்கள் வேறு எவ்வாறு பெயர் பெறும்?**

வல்லினம், வன்கணம், வலி

**17. மெல்லெழுத்துக்கள் வேறு எவ்வாறு பெயர் பெறும்?**

மெல்லினம், மென்கணம், மெலி

**18. இடையெழுத்துக்கள் வேறு எவ்வாறு பெயர் பெறும்?**

இடையினம், இடைக்கணம், இடை

**19. வல்லின எழுத்துக்கள் எவை? எத்தனை?**

க், ச், ட், த், ப், ற் - 6

**20. மெல்லின எழுத்துக்கள் எவை? எத்தனை?**

ங், ஞ், ண், ந், ம், ன் - 6

**21. இடையின எழுத்துக்கள் எவை? எத்தனை?**

ய், ர், ல், வ், ழ், ள் - 6

**22. உயிர் மெய் எழுத்துக்கள் எவை?**

க, கா, கி..... ச, சா, சி........ முதலியன

**23. உயிர்மெய் எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? அவை எவை?**

உயிர்மெய் குற்றெழுத்து (18 x 5 = 90), உயிர்மெய் நெட்டெழுத்து (18 x 7 = 126) என இருவகைப்படும்.

Scanned by CamScanner

**24. உயிர்மெய் குறில்களுக்கு எத்தனை மாத்திரை?**

ஒன்று

**25. உயிர்மெய் நெடில்களுக்கு எத்தனை மாத்திரை?**

இரண்டு

**26. ஆய்தவெழுத்து எத்தனை?**

ஒன்று

**27. ஆய்தவெழுத்துக்கு மாத்திரை எத்தனை?**

அரை

**28. முதலெழுத்துக்கள் எத்தனை?**

பன்னிரண்டு உயிரும் பதினெட்டு மெய்யுமாக (12 + 18 = 30) முப்பது.

**29. சுட்டெழுத்து என்றால் என்ன? உதாரணம் தருக.**

அ, இ, உ என்னும் மூன்று உயிர்களும் சுட்டுப்பொருளில் வரும் போது சுட்டெழுத்தாகும்.

**30. சுட்டெழுத்து எத்தனை வகைப்படும். அவை எவை?**

1. அகச்சுட்டு : அவன், இவன், உவன்
2. புறச்சுட்டு : அக்குதிரை, இக்கதிரை, உம்மனிதன்

என இருவகைப்படும்.

**31. வினா எழுத்துக்கள் எவை?**

'எ' 'ஏ' 'யா' சொல்லின் முதலிலும் 'ஏ' 'ஆ' 'ஓ' சொல்லின் இறுதியிலும் வினாப்பொருளில் வரும்போது வினா எழுத்தாகும்.

உ + ம் : எவன் பாம்பே?

ஏன்? நீயா?

யார்? அவனோ?

**32. இன எழுத்துக்கள் எவை?**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | - | ஆ | க் | - | ங் |
| இ | - | ஈ | ச் | - | ஞ் |
| உ | - | ஊ | ட் | - | ண் |
| எ | - | ஏ | த் | - | ந் |
| ஒ | - | ஓ | ப் | - | ம் |
| ஐ | - | இ | ற் | - | ன் |
| ஔ | - | உ | | | |

என்பன ஒன்றுக்கொன்று இனமாகும்.

Scanned by CamScanner

**33. மாத்திரை என்றால் என்ன?**

ஒரு கண்ணிமைக்கும் பொழுது அல்லது ஒரு கைநொடிப்பொழுது (குறுகிய கால அளவு)

| எழுத்துக்கள் | மாத்திரை |
|---|---|
| ஆய்தக்குறுக்கம் | ½ ஐவிடக் குறைவு |
| மகரக்குறுக்கம் | ½ ஐவிடக் குறைவு |
| * மெய்யெழுத்து | ½ |
| * ஆய்த எழுத்து | ½ |
| * குற்றியலிகரம் | ½ |
| * குற்றியலுகரம் | ½ |
| * உயிர்க்குற்றெழுத்து (குறில்) | 1 |
| * உயிர்மெய் குற்றெழுத்து | 1 |
| ஒற்றளபடை | 1 |
| ஐகாரக்குறுக்கம் | 1 ½ |
| ஔகாரக்குறுக்கம் | 1 ½ |
| * உயிர்நெட்டெழுத்து (நெடில்) | 2 |
| * உயிர்மெய் நெட்டெழுத்து | 2 |
| உயிரளபெடை | 3 |

**குறிப்பு : * முக்கியமானவை**

**34. குற்றியலுகரம் என்றால் என்ன?**

'உ' தன்னுடைய மாத்திரையில் குறைந்தொலிப்பது. இந்த உகரம்,

1. தனிக்குற்றெழுத்தல்லாத மற்றைய எழுத்துக்குப்பின்னே,
2. மொழியின் இறுதியில்,
3. வல்லின மெய்களில் ஏறி வரும்.

**35. குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்? அவை எவை?**

ஆறு வகைப்படும்.

1. நெடிற்றொடர்க் குற்றியலுகரம் நாடு, வீடு, நாகு
2. ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் எஃகு, அஃது, கஃசு
3. வன்றொடர்க் குற்றியலுகரம் பாக்கு, தெற்கு, கச்சு
4. மென்றொடர்க் குற்றியலுகரம் பஞ்சு, சங்கு, வண்டு
5. இடைத்தொடர்க் குற்றியலுகரம் எய்து, அலகு, சால்பு
6. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் வரகு, பலாசு

Scanned by CamScanner

**36. குற்றியலிகரம் என்றால் என்ன? உதாரணம் தருக.**

குற்றிய 'உ' கரம், யகரம் வந்து புணருமிடத்தில் திரிந்து வருகின்ற இகரமாகும்.

உ + ம் : எ.்.கு + யாது = எ.்.கியாது

வீடு + யாது = வீடியாது

வண்டு + யாது = வண்டியாது

**37. முற்றியலுகரம் என்றால் என்ன?**

தனிக்குற்றெழுத்துக்குப் பின் வல்லின மெய்களில் ஏறி நிற்கும் உகரமும், மெல்லின மெய்களிலும் இடையின மெய்களிலும் ஏறி நிற்கும் உகரமும் முற்றியலுகரமாகும்.

உ + ம் : நடு, கணு, மனு, திரு, பூணு, கதவு, அது, வழு, கடு

**38. சொல்லின் முதலில் வரும் (முதனிலை) எழுத்துக்கள் எத்தனை? அவை எவை?**

21

உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும் (அம்மா, ஆடு, இலை, ஈட்டி....), க், ச், த், ந், ப், ம், ய், வ், ஞ் என்னும் மெய் எழுத்துக்கள் ஒன்பதும் (கரி, சந்தி, தரை, நிரை, பந்து, மண், யமன், வளை, ஞமலி).

**39. மொழியின் இறுதியில் வரும் (இறுதிநிலை) எழுத்துக்கள் எத்தனை? அவை எவை?**

22

எ (கரம்) ஒழிந்த பதினொரு உயிரும், வல்லினமும், ங் உம் ஒழிந்த, பதினொரு மெய்யும்.

உ + ம் : பல, பலா, கிளி, திரு.........

உரிஞ், கண், வெரிந், நிலம், மான், கூழ், தெவ்...........


**40. போலியெழுத்துக்கள் எத்தனை வகைப்படும்?**

1. முதற்போலி : அய்யர் (ஐயர்), அவ்வை (ஔவை)
2. இடைப்போலி : இலைஞ்சி (இலஞ்சி), அரையர் (அரயர்)
3. கடைப்போலி : நிலன் (நிலம்), சாம்பர் (சாம்பல்), அகன் (அகம்) என மூன்று வகைப்படும்.



Scanned by CamScanner

## 2. பதம்




**41. பதம் (சொல்) என்றால் என்ன?**

ஓரெழுத்தாலாயினும் இரண்டு முதலிய பல எழுத்துக்களாலாயினும் ஆக்கப்பட்டு பொருளை அறிவிப்பதாகும்.

**42. பதம் எத்தனை வகைப்படும் ?**

பகுபதம், பகாப்பதம் என இருவகைப்படும்.

**43. பகுபதம் என்றால் என்ன?**

பகுதி, விகுதி முதலிய ஆக்கக்கூறுகளாகப் பகுக்கக்கூடிய பதம் (சொல்).

**44. பகுபதம் எத்தனை வகைப்படும்?**

பெயர்ப்பகுபதம், வினைப்பகுபதம் என இருவகைப்படும்.

**45. பகாப்பதம் என்றால் என்ன?**

பகுதி, விகுதி முதலிய ஆக்கக்கூறுகளாகப் பகுக்கப்படாத இயல்புடைய பதம் (சொல்).

**46. பகாப்பதம் எத்தனை வகைப்படும்?**

பெயர்ப்பகாப்பதம், வினைப்பகாப்பதம், இடைப்பகாப்பதம், உரிப் பகாப்பதம் என நான்கு வகைப்படும்.

**47. பகுபத உறுப்புக்கள் எவை? உதாரணம் தருக.**

| | | |
|---|---|---|
| 1. பகுதி | 2. விகுதி | 3. இடைநிலை |
| 4. சந்தி | 5. சாரியை | 6. விகாரம் |

Scanned by CamScanner

உ + ம் : கூனி, ஓடினான், பொன்னன், நடந்தனன்

சந்தி இடைநிலை

நட + த் + த் + அன் + அன்

பகுதி ↓ விகாரம் சாரியை விகுதி

ந்

**48. இடைநிலைகள் யாவை?**

பகுபதங்களில் பகுதிக்கும் விகுதிக்கும் நடுவிலே நிற்கும் இடைப் பகாப்பதங்கள்.

**49. இடைநிலைகள் எத்தனை வகைப்படும்?**

காலங்காட்டா இடைநிலை, காலங்காட்டும் இடைநிலை என இரு வகைப்படும்.

**இடைநிலை**

- பெயரிடைநிலை
  ஞ், வ், ச், த்
  கலைஞன்
  அறிஞன்
- எதிர்மறை இடைநிலை
  இல், அல், ஆ
  நடந்திலன்
  நடக்கலன்
  நடவான்
- வினையிடைநிலை
  - இறந்தகால இடைநிலை
    த், ட், ற், இன்
    உண்டான்
    ஓடினான்
  - நிகழ்கால இடைநிலை
    கின்று, கிறு
    வருகிறான்
    செல்கின்றான்
  - எதிர்கால இடைநிலை
    ப், வ்
    செய்வான்
    படிப்பான்

**50. காலங்காட்டா இடைநிலைக்கு உதாரணம் தருக?**

கலைஞன் - (ஞ் இடைநிலை)
ஓதுவான் - (வ் இடைநிலை)
வலைச்சி - (ச் இடைநிலை)
வண்ணாத்தி - (த் இடைநிலை)

**51. காலங்காட்டும் இடைநிலைகள் எத்தனை வகைப்படும்?**

இறந்தகால இடைநிலை, நிகழ்கால இடைநிலை, எதிர்கால இடைநிலை என மூன்று வகைப்படும்.

**52. இறந்தகால இடைநிலைகள் யாவை?**

த், ட், ற், இன் என்னும் நான்கும்

Scanned by CamScanner

உ + ம் : செய் + த் + ஆன் = செய்தான்
உண் + ட் + ஆன் = உண்டான்
தின் + ற் + ஆன் = தின்றான்
ஓடு + இன் + ஆன் = ஓடினான்

**53. தற்காலத்தில் வழங்கப்படும் நிகழ்கால இடைநிலைகள் எவை?**

கின்று, கிறு என்னும் இரண்டும்.

உ + ம் : நட + கின்று + ஆன் = நடக்கின்றான்
நட + கிறு + ஆன் = நடக்கிறான்

**54. எதிர்கால இடைநிலைகள் எவை?**

ப், வ் என்னும் இரண்டும்.

உ + ம் : செய் + வ் + ஆன் = செய்வான்
படி + ப் + ஆன் = படிப்பான்

**55. எதிர்மறையிடைநிலை எவை?**

இல், அல், ஆ என்னும் மூன்றும்.

உ + ம் : நடந்திலன், நடக்கலன், நடவான்.

## 3. புணர்ச்சி

**56. புணர்ச்சி என்றால் என்ன?**

நிலைமொழியும் வருமொழியும் ஒன்றுபடப் புணர்வது (சொல்லோடு சொல் புணர்தல்).

கலை (நிலைமொழி) + அழகு (வருமொழி) = கலையழகு

**57. அது எத்தனை வகைப்படும்? அவை எவை ?**

இரண்டு 1. வேற்றுமைப் புணர்ச்சி
2. அல்வழிப் புணர்ச்சி

**58. சொற்கள் எப்படிப் புணரும்?**

இயல்பாகவேனும் விகாரமாகவேனும் புணரும்.

**59. இயல்புப் புணர்ச்சி என்றால் என்ன?**

நிலைமொழியும் வருமொழியும் விகாரமின்றிப் புணர்வதாம்.

உ + ம் : பொன் + மணி = பொன்மணி

**60. விகாரப்புணர்ச்சி என்றால் என்ன?**

புணர்ச்சியில் வருகின்ற சொற்களில் ஒன்று அல்லது இரண்டும்

Scanned by CamScanner

தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் விகாரங்களில் ஒன்றையாயினும் பலவற்றையாயினும் பெற்றுப் புணர்வதாகும்.

| | |
|---|---|
| வாழைப்பழம் | தோன்றல் |
| பொற்குடம் | திரிதல் |
| மரவேலி | கெடுதல் |
| மரப்பூனை | கெடுதல், தோன்றல் |
| பனங்காய் | கெடுதல், தோன்றல், திரிதல் |

**61. அல்வழிப் புணர்ச்சியாவது யாது? அது எத்தனை வகைப்படும்?**

வேற்றுமை அல்லாத வழியிற் புணர்வதாம். அது

1. வினைத்தொகை
2. பண்புத்தொகை
3. உவமைத்தொகை
4. உம்மைத்தொகை
5. அன்மொழித்தொகை
6. எழுவாய்த்தொடர்
7. விளித்தொடர்
8. முற்றுத்தொடர்
9. எச்சத்தொடர்

முதலாக பதினான்கு வகைப்படும்.

**62. தனிக்குற்றெழுத்தைச் சாராத மெய்யீற்றின் முன் உயிர் வந்தால் எப்படிப் புணரும்?**

வந்த உயிர் (அ), நின்ற மெய்யின் மேல் (ண்) ஏறும்.

உ + ம் : ஆண் + அழகன் = ஆணழகன்

**63. பெண் + அழகி என்பதை விதி கூறிப்புணர்த்துக?**

தனிக்குற்றெழுத்தைச் சார்ந்த மெய்யீற்றின் முன் உயிர் வந்தால் நிலைமொழி மெய் இரட்டிக்க, இரட்டித்த மெய்யின் மேல் உயிர் ஏறும்.

உ + ம் : பெண் + அழகி = பெண்ணழகி

**64. இ, ஈ, ஐ என்னும் மூன்று உயிரீற்றின் முன்னும் உயிர் வந்தால் எப்படிப் புணரும்?**

உயிரோடு உயிர் சேராது என்பதால் அவற்றை உடன்படுத்த யகர உடம்படுமெய் (ய்) தோன்றும்.

உ + ம் : மணி + அழகு = மணியழகு

தீ + எரிந்தது = தீயெரிந்தது

பனை + ஓலை = பனையோலை

**65. பலா + இலை என்பதை விதிகூறிப் புணர்த்துக?**

அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் ஏழு உயிரீற்றின் முன் உயிர் வந்தால் உயிரையும், உயிரையும் உடன்படுத்த 'வ்' என்னும் வகர உடம்படுமெய் தோன்றும்.

Scanned by CamScanner

உ + ம் : பலா + இலை = பலாவிலை
திரு + அடி = திருவடி
பூ + அரும்பு = பூவரும்பு

**66. குற்றியலுகரத்தின் மேல் உயிர் வந்தால் எப்படிப் புணரும்? யகரம் வந்தால் எப்படிப் புணரும்?**

குற்றியலுகரம் உயிர் வந்தால் தான் ஏறி நின்ற மெய்யை விட்டுக் கெடும் (உக்குறள் விட்டோடும்). யகரம் வந்தால் இகரமாகும்.

உ + ம் : பூட்டு + உடைந்தது = பூட்டுடைந்தது
வீடு + யாது = வீடியாது


## 4. பெயர்

**67. சொற்கள் இலக்கண அடிப்படையில் எத்தனை வகைப்படும்? அவை எவை?**

பெயர், வினை, இடை, உரி என நால்வகைப்படும்.

**68. சொற்கள் பிறப்பின் அடிப்படையில் எத்தனை வகைப்படும்? அவை எவை?**

இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நால்வகைப் படும்.




**69. இரு திணைகளும் எவை?**

உயர்திணை, அஃறிணை

**70. உயர்திணை எவை?**

மனிதர், தேவர், நரகர் ஆகிய மூவகைப் பொருள்களும்.

Scanned by CamScanner

**71. அஃறிணை எவை?**

மிருகம், பறவை முதலிய உயிருள்ள பொருள்களும்; நிலம், நீர் முதலிய உயிரில்லாத பொருள்களும் (உயர்வு அல்லாத திணை. அல் + திணை = அஃறிணை)

**72. ஐம்பாலும் எவை?**

ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்.

**73. உயர்திணைக்குரிய பாற்கள் எவை?**

ஆண்பால் (ஒருமை)


பெண்பால் (ஒருமை)

பலர்பால் (பன்மை)

**74. அஃறிணைக்குரிய பாற்கள் எவை?**

ஒன்றன்பால் (ஒருமை)

பலவின்பால் (பன்மை)




**75. தன்மை, முன்னிலை, படர்க்கை என்பவற்றை வேறுபடுத்துக?**

பேசும் பொருள் தன்மையிடம்;

பேசும் பொருளை எதிர்முகப்பட்டுக் கேட்கும் இடம் முன்னிலை; பேசப்படும் பொருள் படர்க்கை.

உ + ம் : நான், நீ, அவன்

**76. பெயர்ச்சொல் என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?**

ஏதாவது ஒரு பொருளினைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல்லாகும்.

உ + ம் : நாய், மரம், நன்மை.

இது காரணப்பெயர், இடுகுறிப்பெயர், காரணவிடுகுறிப்பெயர் என மூவகைப்படும்.

**77. காரணப்பெயர் என்றால் என்ன?**

ஏதாவது ஒரு காரணம் பற்றிப் பொருளை உணர்த்தி வரும் பெயர் காரணப்பெயராகும். உ + ம் : பறவை

Scanned by CamScanner

**78. இடுகுறிப்பெயர் என்றால் என்ன?**

ஒரு காரணமும் இல்லாது பொருளுக்கு இடுகுறியாய் வழங்கும் பெயராகும்.

உ+ம் : மரம், நிலம், மண், வீடு, கடல்

**79. காரண இடுகுறிப்பெயர் என்றால் என்ன?**

காரணம் கருதிய போது காரணத்தை உடைய பல பொருட்களுக்கும் காரணங்கருதாதபோது இடுகுறியாய் ஒரு பொருளுக்கும் வழங்கும் பெயர். உ + ம் : முள்ளி, முக்கண்ணன்

**80. ஆறு வகைப்பெயர்களும் எவை? உதாரணம் தருக?**

| | | |
|---|---|---|
| பொருட்பெயர் | - | மரம், மேசை |
| இடப்பெயர் | - | நல்லூர், கடல் |
| காலப்பெயர் | - | கோடை, மணி, நிமிடம் |
| சினைப்பெயர் | - | கிளை, கை |
| குணப்பெயர் | - | வெள்ளை, மாண்பு |
| தொழிற்பெயர் | - | பொங்கல், கொலை |

**81. ஆகுபெயர் என்றால் என்ன? உதாரணம் தருக?**

ஒரு பொருளின் இயற்பெயர் அப்பொருளோடு சம்பந்தமுடைய பிறிதொரு பொருளுக்கு தொன்றுதொட்டு வழங்கிவரின் அது ஆகுபெயராகும்.

| | |
|---|---|
| பொருளாகு பெயர் | மல்லிகை சூடினாள் |
| இடவாகு பெயர் | நல்லூர் சிரித்தது |
| காலவாகு பெயர் | கார் பொழிந்தது |
| சினையாகு பெயர் | வெற்றிலை நட்டான் |
| குணவாகு பெயர் | மஞ்சள் பூசினாள் |
| தொழிலாகு பெயர் | பொரியல் உண்டான் |
| எண்ணலளவையாகு பெயர் | காலாலே நடந்தான் |
| எடுத்தலளவையாகு பெயர் | ஒரு இறாத்தல் உண்டான் |
| முகத்தலளவையாகு பெயர் | இரு மைலுக்கு ஒரு லீற்றர் போதும் |
| நீட்டலளவையாகு பெயர் | இரண்டு மீற்றர் வாங்கினான் |
| சொல்லாகு பெயர் | இந்நூலுக்கு உரை செய்தான் |
| தானியாகுபெயர் | விளக்கு உடைந்தது |
| கருவியாகு பெயர் | திருவாசகம் ஓதினான் |
| காரியாகு பெயர் | அலங்காரம் கற்றான் |
| கருத்தாவாகு பெயர் | கல்கி படித்தான் |
| உவமையாகு பெயர் | தென்றல் வந்தாள் |
| அடையடுத்தாகு பெயர் | வெற்றிலை நட்டான் |
| இருமடியாகு பெயர் | கார் பொழிந்தது |
| மும்மடியாகு பெயர் | கார் அறுத்தான் |

Scanned by CamScanner

**82. வேற்றுமை என்றால் என்ன? ஒவ்வொரு வேற்றுமைக்குமுரிய உருபுகள் யாவை? சொல்லுருபுகள் யாவை?**

தன்னை ஏற்ற பெயரின் பொருளை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமையாகும். உ + ம் : மரம் முறிந்தது

| வேற்றுமை | உருபு | சொல்லுருபு |
|---|---|---|
| முதலாம் | உருபு இல்லை | ஆனவன், என்பவன் |
| இரண்டாம் | ஐ | - |
| மூன்றாம் | ஆல், ஆன், ஒடு | உடன், கொண்டு |
| நான்காம் | கு | ஆக, பொருட்டு, நிமித்தம் |
| ஐந்தாம் | இல், இன் | நின்று, இருந்து |
| ஆறாம் | அது | உடைய |
| ஏழாம் | கண், இல் | மேல், கீழ், உள் |
| எட்டாம் | விளிக்கப்படு பொருளாகப் பொருளை வேறுபடுத்தும். | - |

**83. ஆறாம் வேற்றுமையின் தற்காலப் பயன்பாடு என்ன?**

'அது' என்னும் உருபு தற்போது ஒருமை, பன்மை வேறுபாடு இன்றி வழங்கி வருகிறது.

உ + ம் : எனது கால், எனது கைகள்

*நான்காம் வேற்றுமைக்குரிய பொருளிலும் ஆறாம் வேற்றுமை வழங்கி வருகின்றது.

உ + ம் : (1) எனது மகன் (உறவு)
(2) எனது நண்பன் (நட்பு)
(3) எனது எதிரி (பகை)

*அது என்ற உருபுக்குப் பதிலாக உடைய என்ற சொல்லுருபோ, உருபு தொக்குவரும் தொகையோ கையாளப்படுகின்றது.


உ + ம் : (1) என்னுடைய (தம்பி, கதிரை, எதிரி, நண்பன்)
(2) என் (தம்பி, கதிரை, எதிரி, நண்பன்)

**84. இரண்டாம் வேற்றுமை (செயப்படுபொருள்) எத்தனை வகைப்படும்? அவை எவ்வை?**

| | | |
|---|---|---|
| கோயிலைக் கட்டினான் | - | ஆக்கப்படுபொருள் |
| வீட்டை உடைத்தான் | - | அழிக்கப்படுபொருள் |
| நகரையடைந்தான் | - | அடையப்படுபொருள் |
| இல்வாழ்க்கையைத் துறந்தான் | - | துறக்கப்படுபொருள் |
| புலியையொத்தான் | - | ஒக்கப்படுபொருள் |
| பொன்னையுடையான் | - | உடைமைப்பொருள் |

Scanned by CamScanner

# 5. வினை




**85. வினைச்சொல் என்றால் என்ன?**

பொருளினது புடைபெயர்ச்சியை (தொழிலை) உணர்த்தும் சொல்.
உ + ம் : நடந்தான், ஓடினான்.

**86. வினைச்சொல் எத்தனை வகைப்படும்?**

வினைமுற்று, எச்சம் என இருவகைப்படும்.

**87. வினைமுற்று எத்தனை வகைப்படும்?**

தெரிநிலை வினை, குறிப்பு வினை என இருவகைப்படும்.

**88. எச்சம் எத்தனை வகைப்படும்?**

பெயரெச்சம், வினையெச்சம் என இருவகைப்படும்.

**89. தெரிநிலைவினை என்றால் என்ன?**

காலத்தை வெளிப்படையாகக் காட்டும் வினை தெரிநிலை வினையாகும். உ + ம் : நடந்தான், உண்பான்.

**90. குறிப்புவினை என்றால் என்ன?**

காலத்தைக் குறிப்பாகக் காட்டுகின்ற வினை குறிப்பு வினையாகும்.
உ + ம் : இராமன் கரியன், இராமசாமி பெரியன்.

**91. எச்சம் என்றால் என்ன?**

பால் காட்டும் முற்று விகுதி பெறாது குறைச்சொல்லாய் பெயரையோ, வினையையோ கொண்டு முடிவது.
உ + ம் : உண்ட, உண்டு, மெல்ல, வந்த.

**92. பெயரெச்சம் என்றால் என்ன?**

பால்காட்டும் முற்று விகுதி பெறாது குறைச்சொல்லாய் பெயரைக் கொண்டு முடிவது.
உ + ம் : உற்ற நண்பன், நின்ற குதிரை, உண்ட மனிதன்.

**93. வினையெச்சம் என்றால் என்ன?**

பால்காட்டும் முற்று விகுதி பெறாது குறைச்சொல்லாய் வினையைக்

Scanned by CamScanner

கொண்டு முடிவது.

உ + ம் : உண்டு விட்டான், மெல்லச் சிரித்தாள்.

**94. இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாகி வரும் வினைகள் எவை?**

வேறு, உண்டு, இல்லை

**95. செயப்படுபொருள் குன்றிய வினை என்றால் என்ன?**

செயப்படுபொருளைப் பெறாது வருகின்ற வினையாகும்.

உ + ம் : எழுந்தான்

**96. செயப்படுபொருள் குன்றாத வினை என்றால் என்ன?**

செயப்படுபொருளைப் பெற்று வருகின்ற வினையாகும்.

உ + ம் : உண்டான்

**97. செய்வினை என்றால் என்ன?**

செய்பவனின் தொழிலை நேரே உணர்த்தும் வினை.

உ + ம் : கள்வர் கோயிலை உடைத்தனர்.

**98. செயப்பாட்டு வினை என்றால் என்ன?**

'படு' விகுதி புணர்ந்த முதனிலை அடியாகத் தோன்றி வினை முதல் மூன்றாம் வேற்றுமையிலும், செயப்படுபொருள் எழுவாயாகவும் வரப்பெறும் வினையாகும்.

உ + ம் : கோயில் அரசனால் கட்டப்பட்டது.

## 6. இடை

**99. இடைச்சொல் என்றால் என்ன?**

பெயரையோ வினையையோ போன்று தனித்து நிற்காமல் பெயரையோ வினையையோ சார்ந்து வருஞ்சொல்.

உ + ம் : உம், மற்று... போன்றன.

**100. இடைச்சொற்களின் வகைகள் எவை?**

1. வேற்றுமை உருபுகள் - ஐ, ஆல், கு, இன், அது
2. விகுதி உருபுகள் - அன், ஆர், இ
3. இடைநிலை உருபுகள் - கின்று, கிறு, த், ட், ப், வ்
4. சாரியை உருபுகள் - அம், அத்து, அன்
5. உவமை உருபுகள் - போல, புரைய ஒப்ப
6. தத்தம் பொருளுணர்த்துவன - ஏ, ஓ, உம்
7. ஒலி, அச்சம், விரைவு பற்றியன - கடகடென, துண்ணென
8. இசைநிறை - ஒடு, தெய்ய
9. அசைநிலை - மா, மியா

Scanned by CamScanner

**101. அச்சக்குறிப்புப் பொருள் தரும் இடைச்சொற்கள் எவை?**

துண்ணென, துணுக்கென, திட்கென, திடுக்கென. .

## 7. உரி

**102. உரிச்சொல் என்றால் என்ன?**

பொருள்களுக்கு உரிமை பூண்டு நின்றும் பண்பை உணர்த்தி வரும் சொல் ஆகும்.

உ + ம் : கூர்துயர், தவப்பெரிய, சாலச்சிறப்பு.

**103. உலகத்துப் பொருட்கள் எத்தனை வகைப்படும்?**

உயிர்ப்பொருள், உயிரல்பொருள் என இருவகைப்படும்.

**104. இப்பொருள்களுக்குரிய பண்பு எத்தனை வகைப்படும்?**

குணப்பண்பு, தொழிற்பண்பு என இருவகைப்படும்.

**105. உயிர்ப் பொருள்களின் குணப்பண்புகள் யாவை?**

அறிவு, அச்சம், மானம், பொறுமை, மயக்கம், விருப்பு, வெறுப்பு, இரக்கம், நன்மை, தீமை முதலியனவாகும்.

**106. உயிர்ப் பொருட்களின் தொழிற்பண்புகள் யாவை?**

உண்ணல், உடுத்தல், உறங்கல், அணிதல், தொழுதல், நடத்தல், ஆக்கல், காத்தல், அழித்தல் முதலியனவாகும்.

**107. உயிரல் பொருள்களின் குணப்பண்புகள் யாவை?**

வட்டம், சதுரம், முதலான பல்வகை வடிவங்கள்; நறுநாற்றம், தீ நாற்றம் முதலிய இருவகை நாற்றங்கள்; வெண்மை, செம்மை முதலான ஐவகை நிறங்கள்; கைப்பு, புளிப்பு போன்ற அறுவகைச் சுவைகள்; எண்வகைப் பரிசங்கள் என்பனவாகும்.

**108. எண்வகைப் பரிசங்கள் எவை?**

வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, நொய்மை, சீர்மை, இழுமெனல், சருச்சரை என்பவையாகும்.

**109. உயிர்ப் பொருள்/ உயிரல்பொருள் என்னும் இருவகைப் பொருட்களுக்குமுரிய தொழிற்பண்புகள் எவை?**

தோன்றல், மறைதல், வளர்தல், சுருங்கல், நீங்கல், அடைதல், நடுங்கல், ஒலித்தல் முதலியவையாகும்.

**110. உரிச்சொற்கள் பொருட்குணங்களை எவ்வாறு உணர்த்தி வரும்?**

ஒரு குணத்தையும், பல குணங்களையும் உணர்த்தி வரும்.

Scanned by CamScanner

**111. ஒரு குணத்தை உணர்த்தி வரும் உரிச்சொற்கள் எவை?**

சால, உறு, தவ, நனி, கூர், கழி என்பன மிகுதி என்னும் ஒரு குணத்தை உணர்த்தி வரும் உரிசசொற்களாகும்.

உ+ம் : நனி சிறந்தது, தவப்பெரிய

**112. பல குணங்களை உணர்த்தும் உரிச்சொற்கள் எவை?**

கடி, செழுமை முதலான சொற்கள் ஒவ்வொன்றும் பல குணத்தை உணர்த்தும் உரிச்சொற்களாகும்.

உ+ம் : செழுமை - வளம், கொழுப்பு என்ற இருகுணத்தையும், கடி - காவல், வாசனை முதலான குணங்களையும் உணர்த்தி வரும்.

செழும பல் குன்றம், கடி நகர்.

## 8. தொடர்

**113. தொகை நிலைத் தொடர் என்றால் என்ன?**

வேற்றுமை உருபு முதலிய உருபுகள் தொக்கு நிற்க சொல்லோடு சொல் தொடர்வது தொகை நிலையாகும்.

உ+ம் : வீடு கட்டினான் (ஐ)
தென்றலவள் (போன்ற)

**114. தொகை நிலைத்தொடர் எத்தனை வகைப்படும்?**

ஆறு வகைப்படும்.

**115. அவையாவன யாவை?**

வினைத் தொகை - கடிநாய், கொல் களிறு
பண்புத் தொகை - செந்தாமரை, வட்டக்கல்
உவமைத் தொகை - பவளவாய், துடியிடை
உம்மைத் தொகை - இராப்பகல், ஒன்றேகால்
வேற்றுமைத் தொகை - வேலன்மகள், தலை வணங்கினான்
அன்மொழித் தொகை - தேன்மொழி, உயிர்மெய், பூங்குழல்

**116. தொகா நிலைத் தொடர் என்றால் என்ன?**

வேற்றுமையுருபு முதலியன வெளிப்பட்டு (தொகாது) நிற்க சொல்லோடு சொல் தொடர்வதாகும்.

உ+ம் : வீட்டைக் கட்டினான்
கடித்த நாய்
இரவும் பகலும்

**117. தொகா நிலைத் தொடர் எத்தனை வகைப்படும்?**

Scanned by CamScanner

ஒன்பது வகைப்படும்.

**118. தொகா நிலைத் தொடரின் ஒன்பது வகைகளும் யாவை?**

| | |
|---|---|
| (1) எழுவாய்த்தொடர் | - இராமன் வந்தான் |
| (2) விளித்தொடர் | - இராமா வா |
| (3) வேற்றுமைத் தொகாநிலைத்தொடர் | - கோட்டையை இடித்தான் |
| (4) வினைமுற்றுத்தொடர் | - உண்டான் இராமன் |
| (5) பெயரெச்சத்தொடர் | - நின்ற மனிதன் |
| (6) வினையெச்சத்தொடர் | - உண்டு வந்தான் |
| (7) இடைச்சொற்றொடர் | - மற்றொன்று |
| (8) உரிச்சொற்றொடர் | - கடிகமலம் |
| (9) அடுக்குத்தொடர் | - பாம்பு பாம்பு |

**119. தொடர்மொழி எத்தனை வகைப்படும்?**

முற்றுத்தொடர்மொழி, எச்சத்தொடர்மொழி என இருவகைப்படும்.

**120. முற்றுத்தொடர்மொழி வேறு எவ்வாறு அழைக்கப்படும்?**

வாக்கியம் என்று அழைக்கப்படும்.

உ+ம் : இராமன் வந்தான்.
முருகன் சோற்றை உண்டான்.

## 9. பொது

**121. தற்பவம் என்றால் என்ன?**

வடமொழிச் சொற்களைத் தமிழில் வழங்கும் போது அவற்றைத் தமிழ்மொழிக்கே உரிய சிறப்பான எழுத்துக்களால் வழங்குதலாகும்.
உ+ம் : புத்தகம், இலட்சியம், வேட்டி.

**122. தற்சமம் என்றால் என்ன?**

வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் பொதுவான எழுத்துக்களாலாகி தமிழில் வழங்கும் வடமொழிச்சொற்கள்.
உ+ம் : வனம், தனம்

**123. தமிழ்ச் சொற்களில் வழங்கும் இருவகை வழக்கும் எவை?**

| | |
|---|---|
| **(1) இயல்பு வழக்கு** | **(2) தகுதி வழக்கு** |
| (அ) இலக்கணமுடையது | (அ) இடக்கரடக்கல் |
| (ஆ) இலக்கணப்போலி | (ஆ) மங்கலம் |
| (இ) மரூஉ | (இ) குழூஉக்குறி |

**124. மரபாவது யாது?**

உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் எப்பொருட்கு எப்பெயர் வழங்கி வருமோ, அப்பொருளை அச்சொல்லாற் கூறுவதாகும்.
உ+ம் : ஆடு மேய்ப்பான் - இடையன், ஆனை மேய்ப்பான் - பாகன், மாங்கன்று, குதிரைக்குட்டி



Scanned by CamScanner

# இலக்கணப் பயிற்சி

## 1. எழுத்து

01. தமிழ் நெடுங்கணக்கு எழுத்துக்கள் எத்தனை?
02. ஐயர், நிமலன், அவ்வை, சாம்பல் என்பவற்றில் போலி எது?
03. ஒரு மாத்திரை அளவில் நின்று குறைந்து ஒலிக்கும் உகரம் எவ்வாறு அழைக்கப்படும்?
04. (அ, க, இ) (ஆ, ஈ, ஊ) (கீ, கா, மா) என்பவற்றில் ஒரு மாத்திரையளவில் ஒலிக்கும் எழுத்துக்களின் கூட்டம் எது?
05. 'ஃ' என்ற ஆய்தத்தின் மாத்திரை எவ்வளவு?
06. (அ, இ, உ) (யா, ஓ, ஆ) (க, கா, கீ) என்பவற்றில் இரண்டு மாத்திரைகள் மட்டும் கொண்ட எழுத்துக்களின் கூட்டம் எது?
07. அவன், எவன், இவன், உக்குதிரை இவற்றில் சுட்டெழுத்தல்லாத சொல் எது?
08. அவன், அம்மணி, இக்கதிரை என்பவற்றில் அகச்சுட்டு அமைந்த சொல் எது?
09. புறச்சுட்டுக்கு உதாரணம் ஒன்று தருக?
10. ஒற்று எழுத்துக்கள் எத்தனை?
11. முதலெழுத்துக்கள் எத்தனை?
12. ஆவி எழுத்துக்கள் எத்தனை?
13. சுட்டெழுத்துக்களின் மாத்திரை எவ்வளவு?
14. குற்றியலிகரம் எத்தனை மாத்திரை கொள்ளும்?
15. (எ, ஏ, யா) (ஆ, ஓ, ஏ) (எ, ஆ, ஓ) (யா, ஏ, ஆ) இவற்றில் மொழியின் முதலில் வரும் வினா எழுத்துக்கள் அமைந்த தொகுதி எது?
16. (க், ங், ச், ஞ்) (ய், ர், வ், ல்) (ட், த், ப், ற்) இவற்றில் வல்லின எழுத்துக்களின் தொகுதி எது?
17. (த், ம், ன், ற்) (ங், ஞ், ன், ம்) (ய், ர், ழ், ள்) இவற்றில் மெல்லின எழுத்துக்களின் தொகுதி எது?
18. (ய், ர், ழ், ள்) (க், ச், ட், த்) (ங், ஞ், ந், ண்) இவற்றில் இடையின எழுத்துக்களின் தொகுதி எது?
19. (க், ங்) (ஞ், ங்) (ட், ன்) (த், ன்) என்பவற்றில் இன எழுத்துக்கள் அமைந்த தொகுதி எது?

Scanned by CamScanner

20. (அ, எ, உ) (அ, ஆ, இ) (அ, இ, உ) (எ, ஏ, யா) என்பவற்றில் சுட்டெழுத்துக்கள் அமைந்த தொகுதி எது?

21. பின்வரும் எழுத்துக்களுக்கு இன எழுத்து தருக?

| | |
|---|---|
| அ - | த் - |
| க் - | ஐ - |
| ப் - | ற் - |

22. (க, கீ, சௌ, சூ) (அ, ங, ர, வோ) (மா, கி, ல, ர) இவற்றில் முதனிலை எழுத்துக்களின் தொகுதி எது?

23. (அ, ஆ, இ, உ) (க, கா, கீ, கூ) (ல, லி, லே, லோ) (வ, வா, வி, வீ) என்பவற்றின் முதனிலை எழுத்துக்களாக அமையாத தொகுதி எது?

24. (ய், ர், ல், வ்) (ன், ண், ந், ம்) (க், ச், ட், த்) (அ, இ, உ, ஓ) இவற்றில் இறுதிநிலை எழுத்தாக அமையாத தொகுதி எது?

25. (ழ், ள், ல், ய்) (ங், ட், ச், ற்) (அ, இ, உ, எ) இவற்றில் மொழிக்கு இறுதியில் நிற்கும் எழுத்துக்களின் தொகுதி எது?

## 2. பதம்

26. 'கூனி' இதில் விகுதி எது?

27. பகுபத உறுப்புக்களில் பால்காட்டும் உறுப்பு எது?

28. 'உண் + ட் + ஆன்' இதில் காலம் காட்டும் உறுப்பு எது?

29. 'புளியங்காய்' இதில் வரும் சாரியை எது?

30. 'கலைஞன்' இதில் வரும் பெயரிடைநிலை எது?

31. (வ், ஞ்) (ப், வ்) (கின்று, கிறு) இவற்றில் எதிர்கால இடைநிலைகள் அமைந்த தொகுதி எது?

32. (கின்று, கிறு) (ச், த்), (வ், ஞ்) இவற்றில் நிகழ்கால இடைநிலைகள் அமைந்த தொகுதி எது?

33. இறந்தகால இடைநிலைகள் எவை?

34. 'நடந்திலன்' இதில் வரும் எதிர்மறை இடைநிலை எது?

35. 'பிடித்தனன்' என்பதை பகுபத உறுப்புக்களாய் எழுதுக?

36. பகுபத உறுப்புக்களில் காலம் காட்டும் உறுப்பு எது?

37. பகுபத உறுப்புக்களில் காலம் காட்டாத இடைநிலைகள் எவை?

38. பகுபத உறுப்புக்களில் செயலை உணர்த்தும் உறுப்பு எவ்வாறு வழங்கப்படும்?

Scanned by CamScanner

39. பகுபத உறுப்புக்கள் ஆறும் அமைந்த சொல் ஒன்று தருக?

40. இடைநிலையேற்காது விகுதியே காலம் காட்டுதல் உண்டோ?

## 3. புணர்ச்சி

பின்வருவனவற்றைப் புணர்த்தி எழுதுக.

41. மரம் + வேர் =

42. மணி + அழகு =

43. சேறு + நிலம் =

44. நிலம் + பனை =

45. ஆண் + அழகன் =

46. மரம் + உண்டு =

47. பொன் + அழகி =

48. கல் + எறிந்தான் =

49. தெங்கு + காய் =

50. செம்பு + கம்பி =

51. அவனே + அழகன் =

52. சிவன் + பெருமான் =

53. அணை + கட்டு =

54. கை + மாறு =

55. குணக்கு + திசை =

56. பல + அணி =

57. ஆடு + அரிது =

58. சே + உழுதது =

59 ஆறு + மணி =

60. இந்து + உதித்தது =

61. நாகு + யாது =

62. கதவு + உடைந்தது =

63. கபிலன் + பரணன் =

64. குமரன் + கோட்டம் =

65. என்பு + உடம்பு =

66. கந்தன் + வேள் =

67. மண் + குடம் =

68. சதுரம் + பலகை =

69. கிழக்கு + திசை =

70. தமிழ் + தாய் =

பின்வருவனவற்றைப் பிரித்து எழுதுக.

71. ஈராயிரம் =

72. பதிற்றுப்பத்து =

73. அவ்வுயிர் =

74. ஒவ்வொன்று =

75. மருத்துப்பை =

76. எந்நாடு =

77. தேநீர் =

78. எண்ணெய் =

79. பற்பொடி =

80. குளத்தங்கரை =

81. ஆடியாது =

82. காட்டுப்பசு =

83. தூணன்மை =

84. எந்நூல் =

85. கதவுடைந்தது =

86. பனங்காய் =

Scanned by CamScanner

... நூல் நிலையம்
திகதி
செல்லியடி - கரவெட்டி

87. ஆலங்காய் =
88. பொதுவறிவு =
89. பன்னிரண்டு =
90. அற்புத்தளை =
91. கற்றா =
92. கருப்புநாண் =
93. எற்புடம்பு =
94. வாட்கண் =
95. நாலாயிரம் =
96. மேல்கடல் =
97. மேற்றிசை =
98. பண்டைக்காலம் =
99. புளியங்காய் =
100. தொண்ணூறு =

## 4. பெயர்

101. மனிதர், தேவர், குரங்கு, நரகன் என்பவற்றில் அஃறிணை எது?
102. இருதிணை ஐம்பால் மூவிடத்துக்கும் பொதுவாக வரக்கூடிய பெயர்எது?
103. குயில் ஒரு பறவை; குதிரை ஒரு மிருகம். இதில் காரணப்பெயர் எது?
104. கண்ணன், நல்லூரன், கணக்கன், சூரியன் இவற்றில் காரண இடுகுறிப் பெயர் அல்லாத பெயர் எது?
105. 'தென்றல் வந்தாள்' இது என்ன வகை ஆகுபெயர்?
106. 'திருவாசகம் ஓதினான்' என்ன வகை ஆகுபெயர்?
107. 'மல்லிகை மலர்ந்தது' இது என்ன வகை ஆகுபெயர்?
108. 'காலால் நடந்தான்' என்ன வகை ஆகுபெயர்?
109. 'விளக்கு முறிந்தது' இது என்ன வகை ஆகுபெயர்?
110. 'பொரியலோடு உண்டான்' இது என்ன ஆகுபெயர்?
111. 'இந்நூற்குரை செய்தான்' என்பதில் வரும் ஆகுபெயர்?
112. 'வெற்றிலை நட்டான்' என்பதில் வரும் ஆகுபெயர்?
113. 'மஞ்சள் பூசினாள்' என்பதில் வரும் ஆகுபெயர்?
114. 'உடமைப்பொருள்' எவ்வேற்றுமைக்குரியது?
115. 'பாம்புக்குப் பகை கீரி' இதில் வரும் வேற்றுமை உருபு?
116. 'கந்தனுக்கு மகன்' இது எத்தனையாம் வேற்றுமை?
117. 'தேவதையைக் கண்டேன்' இதில் வரும் வேற்றுமை?
118. 'ஊரில் இருந்தாள்' இது எத்தனையாம் வேற்றுமை?

Scanned by CamScanner

119. நீ என்னும் முன்னிலைப் பெயர் நான்காம் வேற்றுமை ஏற்றால் அடையும் வடிவம்?

120. நீ, நான், அவன், உன் என்பவற்றுள் தன்மைப் பெயராவது யாது?

121. அரசன், அதிபர், மணவாளன், மணிவண்ணன் இச்சொற் கூட்டத்தில் உள்ள உயர்திணை இருபாற் பொதுப்பெயர்?

122. தொழிலாளி என்ற சொல் உயர்திணை இருபாற் பொதுப்பெயராக அமையுமா?

## 5. வினை

123. நடந்தான், நல்லன், படுக்கின்றான் இதில் குறிப்பு வினை எது?

124. சின்னவள் மெல்ல நடந்து வந்தாள். இதில் தெரிநிலை வினைமுற்று ஒன்று தருக?

125. 'செக்கச் சிவந்த சூரியன் மெல்ல மேலெழுவான்' இதில் வரும் 'மெல்ல' என்பது எவ்வாறு வழங்கப்படும்?

126. கரிய, நடந்த, நல்லன், நடந்து இவற்றில் வினையெச்சம் எது?

127. நடந்து போனான், ஓடச்செய்தான், பாடினான் என்பவற்றில் துணை வினை அமைந்த சொல் எது?

128. வேடர் கள்ளை, 'சொல் விளம்பி' என்று அழைத்தல் மங்கலம், இடக்கரடக்கல், குழூஉக்குறி.....

129. செய்தான், செய்வித்தான், செய்யப்பட்டது இதில் பிறவினை வடிவம் பெற்ற சொல் எது?

130. 'வெளுத்தான்' என்பது அவன் என்னும் எழுவாயை மட்டும் ஏற்றுவரின் அது தன்வினையா? பிறவினையா?

131. 'அரசனால் கோவில் இடிக்கப்பட்டது' இது செயப்பாட்டு வினையா? பிறவினையா?

132. 'துணியை வெளுத்தான்' என்பது செய ப்படுபொருள் குன்றிய வினையா? குன்றாத வினையா?

133. முன்றில், புறநகர், போழ்து, மீகாண் என்பவற்றில் இலக்கணப்போலி அல்லாதது எது?

Scanned by CamScanner

## 6. இடை

134. சரேலென, திடுக்கென, படபடவென இவற்றில் அச்சக்குறிப்பு உணர்த்தும் இடைச்சொல் எது?

135. 'அச்சோ' என்பது உணர்த்தும் பொருள் யாது?

136. முன், உம், சும்மா இவற்றில் பயனின்மைப்பொருள் தரும் இடைச் சொல் எது?

137. 'நீயே பெரியன்' என்ற தொடரில் ஏகார இடைச்சொல்லின் பொருள் யாது?

138. 'ஓ.... நீ பெரியவள் தான்' இதில் வரும் ஓகார இடைச்சொல்லின் பொருள் யாது?

139. 'பறவையின் பாதிப்பயணமும் எண்ணமும் இங்கே கவியாய்க் கிடக்கிறது'. இதில் உம்மை இடைச்சொல்லின் பொருள் என்ன?

140. 'ஐயகோ! இனி நான் என் செய்வேன்?' என்னும் தொடரில் 'ஐயகோ' என்பது உணர்த்தும் பொருள்.

141. இனி, உம், மன் என்பவற்றில் எச்சப்பொருள் உணர்த்தும் இடைச் சொல் எது?

142. கடகடவென, களகளென, நெறுநெறென, துணுக்கென இவற்றில் ஒலிக்குறிப்பு உணர்த்தாத இடைச்சொல் எது?

143. 'கணீரென்று மணி ஒலித்தது' இதிலே வரும் 'கணீரென்று' என்ற சொல் உணர்த்தும் பொருள் யாது?

144. ஆடு, பாடு, தெய்ய, ஓசை இவற்றில் இசைநிறையிடைச் சொல் எது?

145. சரேலென, இம்மென, துணுக்கென, சோவென என்பவற்றில் விரைவுக் குறிப்புணர்த்தும் இடைச்சொல் எது?

146. களகளென, அச்சோ, படபடென, அம்மா என்பவற்றில் இரக்கப் பொருள் தரும் இடைச்சொல் எது?

## 7. உரி

147. உண், தீமை, மயக்கம், அழகு என்பவற்றில் தொழிற்பண்பை உணர்த்தும் சொல் எது?

148. சால, உறு, தவ, மால் என்பவற்றில் மிகுதிப்பொருளை உணர்த்தும் உரிச்சொல் அல்லாதது?

Scanned by CamScanner

149. இடது கண் நனி துடிக்கின்றது. இதில் வந்த உரிச்சொல்...
150. ‘தவச்சிறிது’ என்பதன் பொருள் என்ன?
151. ‘சாலச்சிறந்தது’ என்பதில் ‘சால’ உணர்த்தும் பொருள் என்ன?
152. ‘செழும் பல் குன்றம்’ என்பதில் ‘செழும்’ என்ற சொல் உணர்த்தும் குணப்பண்பு என்ன?
153. பச்சை, பசுமை, பாச்சு என்பவற்றில், ‘பாசி’ என்னும் சொல் உருவாக அடியாய் அமைந்த சொல் எது?
154. உறு, தவ, கடி, நனி என்பவற்றில் பல குணத்தை உணர்த்தும் சொல் எது?
155. ‘செழுந்தடிதின்ற செந்நாய்’ என்பதில் ‘செழும்’ உணர்த்துகின்ற பண்பு எது?
156. ‘கழிகண்ணோட்டம்’என்பதில் உரிச்சொல் எது?
157. ‘வந்து நனி வருந்தினை வாழிய நெஞ்சே’ என்பதில் உரிச்சொல் எது?
158. கைப்பு, புளிப்பு, உவர்ப்பு, காழ்ப்பு என்பவற்றில் அறுவகைச் சுவையில் அடங்காதது?
159. ‘தென்மலை மிருந்த சீர்சான் முனிவரன்’ என்பதில் உரிச்சொல் எது?
160. சால, உறு, தவ, நனி என்பன உணர்த்தும் பொருள் என்ன?

## 8. தொடர்

161. கடிகமலம், கடிநாய், கொல்லன், செந்நாய் இதில் வினைத்தொகை எது?
162. கொல்யானை, இராப்பகல், கருங்காலி இதில் உம்மைத்தொகை எது?
163. கருங்குதிரை, எள்ளுப்பாகு, தசரதன் மகன் இதில் வேற்றுமைத் தொகை எது?
164. செந்தாமரை, கடிகமலம், தேநீர் இதில் பண்புத்தொகை எது?
165. ஒன்றேகால், சாந்தன், துடியிடை இதில் உவமைத்தொகை எது?
166. ‘பாம்பு பாம்பு’ ‘நனிபேதை’ ‘மற்றொன்று’ இதில் உரிச்சொற்றொடர் எது?
167. கொல்களிறு, கடிநாய், பாம்பு பாம்பு இதில் அடுக்குத்தொடர் எது?

Scanned by CamScanner

168. உண்டு வந்தான், உண்டான், இராமன் வந்தான் இதில் எழுவாய்த் தொடர் எது?

169. கோட்டை கட்டினான், வெதுப்பி உண்டான், உண்டான் குளிர்களி இதில் வினைமுற்றுத் தொடர் எது?

170. 'இதயத்தின் ஒளியெலாம் இருளிலே நீ கண்டாய்' இதில் வரும் எழுவாய்த்தொடர் எது?

## 9. பொது

171. 'வட்டுக்கோட்டைக்கு என்ன வழி?' என்ற வினாவுக்கு 'கொட்டைப் பாக்கு இரண்டு ரூபா' என விடை பகருவது என்ன வழு?

172. 'நீ வந்தாள்' என்பது இடவழுவா? திணைவழுவா? பால்வழுவா?

173. 'நாய் குரைத்தான்' என்பதில் அமைந்த வழுவமைதி?

174. நம்பி வந்தான், நங்கை வந்தார், அவன் வந்தேன் இதில் இட வழு எது?

175. கண்கள் சிவந்தது, இராமன் பாடினாள், நான் வந்தாய் இதில் பால்வழுவமைதி எது?

176. ஊர்வலம், புறநகர், நகர்ப்புறம் என்பவற்றில் இலக்கணப்போலி எது?

177. மலை நின்றது, மலை நிற்கின்றது, மலை நிற்கும் இதில் எது சரி?

178. எதிர்கால வினை விரைவு பற்றி நிகழ்கால வினையாகவேனும் இறந்த கால வினையாகவேனும் சொல்லப்படுமா?

179. தமிழ்நாட்டு (மூவேந்தர், மூவேந்தரும், மூவேந்தர்கள்) வந்தனர்.

180. 'நானே எனக்குத் தேவையான பணத்தைப் பெற்றேன்' இவ்வாக் கியத்தில் 'பெற்றேன்' என்பது தன்மைப்பன்மை, தன்மை ஒருமை, முன்னிலை ஒருமை.

181. மயில் குழாம் என்பது போல முகில்.............

182. கிளி பேசும் என்பது போல புறா.................

183. கோழி கொக்கரிப்பது போல பல்லி...............

184. பூக்களின் கூட்டம் 'மஞ்சரி' என்பது போல வைக்கோலின் கூட்டம்...........

185. புறவுலா என்பது உலாப்புறம் போல நகர்ப்புறம்...........

186. குதிரைக்கு குட்டி போல கீரிக்கு..........

Scanned by CamScanner

187. ஆட்டுக்கு புழுக்கை போல ஆனைக்கு...........

188. மாங்கன்று போல தென்னம்...............

189. ஆனை கட்டுமிடம் பந்தி போல மாடு கட்டுமிடம்...............

190. ஆடு மேய்ப்பவன் இடையன் போல ஆனை செலுத்துபவன்................

191. மரம், கொடி, செடி, இலை, புல் இவற்றில் சினைப்பெயராக அமைவது?

192. 'மா' என்பது குதிரை எனப்படுவது போல 'வீ' என்பது...........

193. வீட்டை, நடந்தானை, யானையை என்பதில் வினையாலணையும் பெயர் எது?

194. புஷ்பம், புத்தகம், குங்குமம் என்பவற்றில் வடமொழிக்கும் தமிழ் மொழிக்கும் பொதுவான எழுத்துகளாலாகி தமிழில் வழங்கும் வடசொல் (தற்சமம்) எது?

195. வடகம், புத்தகம், அங்குஷம் என்பவற்றில் தற்பவம் எது?

196. 'செக்கு மாடு போல் உழைத்தான்' இது உவமை அணியா? உருவக அணியா?

197. கொக்கு, மரம், கிளி, பென்சில் இதில் திசைச்சொல் எது?

198. அலுமாரி, நிலம், கோப்பை, பட்டாளம் இவற்றில் எது இயற்சொல்?

199. 'தங்கத் தமிழரின் வீரத்தைக் கண்டு பனிமலைகள் ஆறாகி ஓடின.' இதிலுள்ள அணி எது?

200. 'இலக்கணச் சுருக்கம்' யாரால் இயற்றப்பட்டது?

**முக்கிய குறிப்பு :**

மாணவர்கள் அனைவரும் உயிரெழுத்துக்களை மட்டுமன்றி மெய்யெழுத்துக்களையும் ஒழுங்காக அறிந்திருத்தல் அவசியமாகும். அதற்கு முதலில் வல்லின, மெல்லின, இடையின எழுத்துக்களை ஒழுங்காக மனனம் செய்து கொள்க. பின்னர் வல்லின வரிசையின் இறுதி எழுத்தான 'ற்' ஐயும், மெல்லின இறுதியான 'ன்' ஐயும் விடுத்து ஏனையவற்றை ஒன்றுமாறி ஒன்றாக (இன எழுத்து ஒழுங்கில்) ஒழுங்காக எழுதுக. அதைத் தொடர்ந்து ய, ர, ல, வ, ழ, ள என்ற இடையினத் தொகுதியை எழுதுக. இறுதியாக ற், ன் என்பவற்றை எழுதுக.

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்

Scanned by CamScanner

# இலக்கணப் பயிற்சி விடைகள்

01. 247
02. அவ்வை
03. குற்றியலுகரம்
04. (அ, க, இ)
05. அரை
06. (யா, ஓ, ஆ)
07. எவன்
08. அவன்
09. அம்மரம்
10. 18
11. 30
12. 12
13. ஒன்று
14. அரை
15. (எ, ஏ, யா)
16. (ட், த், ப், ற்)
17. (ங், ஞ், ன், ம்)
18. (ய், ர், ழ், ள்)
19. (க், ங்)
20. (அ, இ, உ)
21. அ - ஆ
க் - ங்
ப் - ம்
த் - ந்
ஐ - இ
ற் - ன்
22. (க, கீ, சௌ, சூ)
23. (ல, லி, லே, லோ)
24. (க், ச், ட், த்)
25. (ழ், ள், ல், ய்)
26. இ
27. விகுதி
28. ட் - இடைநிலை
29. அம்
30. ஞ்
31. (ப், வ்)
32. (கின்று, கிறு)
33. த், ட், ற், இன்
34. இல்
35. பிடி+த்+த்+அன்+அன்
36. இடைநிலை
37. ஞ், வ், ச், த்
38. பகுதி
39. நடந்தனன்
40. ஆம்
41. மரவேர்
42. மணியழகு
43. சேற்றுநிலம்
44. நிலப்பனை
45. ஆணழகன்
46. மரமுண்டு
47. பொன்னழகி
48. கல்லெறிந்தான்
49. தேங்காய்
50. செப்புக்கம்பி
51. அவனேயழகன்
52. சிவபெருமான்
53. அணைக்கட்டு
54. கைம்மாறு
55. குணதிசை
56. பலவணி
57. ஆடரிது
58. சேவுழுதது
59. அறுமணி
60. இந்துதித்தது
61. நாகியாது

Scanned by CamScanner

62. கதவுடைந்தது
63. கபிலபரணன்
64. குமரக்கோட்டம்
65. எற்புடம்பு
66. கந்தவேள்
67. மட்குடம்
68. சதுரப்பலகை
69. கீழ்த்திசை
70. தமிழ்த்தாய்
71. இரண்டு + ஆயிரம்
72. பத்து + பத்து
73. அ + உயிர்
74. ஒன்று + ஒன்று
75. மருந்து + பை
76. எம் + நாடு
77. தே + நீர்
78. எள் + நெய்
79. பல் + பொடி
80. குளம் + கரை
81. ஆடு + யாது
82. காடு + பசு
83. தூண் + நன்மை
84. எம் + நூல்
85. கதவு + உடைந்தது
86. பனை + காய்
87. ஆல் + காய்
88. பொது + அறிவு
89. பத்து + இரண்டு
90. அன்பு + தளை
91. கன்று + ஆ
92. கரும்பு + நாண்
93. என்பு + உடம்பு
94. வாள் + கண்
95. நாலு + ஆயிரம்
96. மேற்கு + கடல்
97. மேற்கு + திசை
98. பண்டு + காலம்
99. புளி + காய்
100. ஒன்பது + பத்து
101. குரங்கு
102. எல்லாம்
103. பறவை
104. சூரியன்
105. உவமையாகு பெயர்
106. கருவியாகு பெயர்
107. பொருளாகு பெயர்
108. எண்ணலளவையாகு பெயர்
109. தானியாகு பெயர்
110. தொழிலாகு பெயர்
111. சொல்லாகு பெயர்
112. சினையாகு பெயர்
113. குணவாகு பெயர்
114. ஆறாம் வேற்றுமைக்கு
115. 4 ஆம் வேற்றுமையுருபு (கு)
116. நான்காம் வேற்றுமை
117. 2 ஆம் வேற்றுமையுரு (ஐ)
118. ஏழாம் வேற்றுமை
119. உனக்கு
120. நான்
121. அதிபர்
122. ஆம்
123. நல்லன்
124. வந்தாள்
125. வினையெச்சம்
126. நடந்து
127. ஓடச்செய்தான்
128. குழுஉக்குறி
129. செய்வித்தான்
130. தன்வினை
131. செயப்பாட்டுவினை

Scanned by CamScanner

சுயப்படுபொருள் குன்றாவினை

போழ்து

134. திடுக்கென

135. வியப்புப்பொருள்

136. சும்மா

137. உயர்வுச்சிறப்புப் பொருள்

138. உயர்வுச்சிறப்புப் பொருள்

139. எண்ணுப்பொருள்

140. இரக்கப்பொருள்

141. உம்

142. துணுக்கென

143. இசைப்பொருள்

144. தெய்ய

145. சரேலென

146. அச்சோ

147. உண்

148. மால்

149. நனி

150. மிகச் சிறிது

151. மிகுதிப்பொருள்
(மிகச சிறந்தது)

152. வளம்

153. பசுமை

154 கடி

155. கொழுப்பு

156. கழி

157. நனி

158. காழ்ப்பு

159. சால்

160. மிகுதிப்பொருள்

161. கடிநாய்

162. இராப்பகல்

163. தசரதன் மகன்

164. செந்தாமரை

165. துடியிடை

166. நனிபேதை

167. பாம்பு பாம்பு

168. இராமன் வந்தான்

169. உண்டான் குளிர்களி

170. நீ கண்டாய்

171. விடைவழு

172. இடவழு

173. திணைவழு

174. அவன் வந்தேன்

175. கண்கள் சிவந்தது

176. புறநகர்

177. மலை நிற்கின்றது

178. ஆம்.
உ + ம் : வருகிறேன்
(நிகழ்காலம்)

179. மூவேந்தரும்

180. தன்மை ஒருமை

181. கூட்டம்

182. குறுகுறுக்கும்

183. சொல்லும்

184. கற்றை

185. புறநகர்

186. பிள்ளை

187. இலண்டம்

188. பிள்ளை

189. தொழுவம்

190. பாகன்

191. இலை

192. மலர்

193. நடந்தானை

194. குங்குமம்

195. அங்குஷம்

196. உவமை அணி

197. பென்சில்

198. நிலம்

199. தற்குறிப்பேற்றம்

200. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

Scanned by CamScanner